# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101952

1. District : மாவட்டம் திண்டுக்கல் | PS: காவல்நிலையம் V & AC | Year: ஆண்டு 2023 | FIR No.: மு.த.அ. எண் 05/23 | Date: நாள் 10.10.2023

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended by the | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 10.10.2023ம் தேதி 10.45 மணி முதல் 10.10.2023ம் தேதி
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 17.45 மணி வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.10.2023 | Time : நேரம் 19.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.10.2023 | Time : நேரம் 19.00 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 km தென்மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி கோட்டை மாரியம்மன், திருக்கோவில் அலுவலகம், திண்டுக்கல்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. சிங்காரவேலன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மாணிக்கம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மதுரை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. M. மருதநாயகம் வயது 57/23, த/பெ. முத்துக்குமார், கண்காணிப்பாளர், கோட்டை மாரியம்மன் அலுவலகம், திருக்கோவில் (கூடுதல் பொறுப்பு), திண்டுக்கல்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP 240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10/10/2023

DSP/VEAC/DGL 10/10/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
10.10.2023 . 21:00 hrs

Name: பெயர் J. நாகராஜன்,
Rank: நிலை ......................No. எண் .........
காவல் துணை கண்காணிப்பாளர்
ல.த.த.பிரிவு, திண்டுக்கல்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.05/2023, சட்டப்பரிவு.7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தி அமைக்கப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 10.10.2023-ம் தேதி மாலை 19.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது மதுரை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.ம.சிங்காரவேலன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று 10.10.2023-ம் தேதி மாலை 19.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.மா.சிங்காரவேலன், த/பெ.மலையாண்டி, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மதுரை, பெறுநர். காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல். அய்யா, நான் நான் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இன்று 10.10.2023ம் தேதி திண்டுக்கல் கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் நெடுஞ்சாலை பணி செய்யும் ஒப்பந்ததாரர்களிடம் ஏற்கனவே முடிக்கப்பெற்ற ஒப்பந்த பணிகளுக்கு சமர்பிக்கப்பட்ட EMD பத்திரங்களை பணமாக மாற்றி கொள்ள வேண்டி திரும்ப கொடுப்பதற்காக லஞ்சமாக பணம் பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காலை சுமார் 10.45 மணிக்கு திண்டுக்கல் கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அலுவலகத்தில் நான் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.J.நாகராஜன் மற்றும் பார்ட்டி சகிதம் திடீர் சோதனை செய்வதற்காக திண்டுக்கல் To திருச்சி செல்லும் தென்வடல் ரோட்டின் மேற்கு பக்கம் உள்ள திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு எதிர்புறம் தெற்கு பார்த்து வாசல் கொண்ட இரும்பு கேட்டின் உள்ளே நுழைந்தபோது திண்டுக்கல் கோட்ட பொறியாளர் அறையில் கோட்ட பொறியாளர் இல்லை. பின்பு நுழைவு வாயிலுக்கு நேராக கண்ணாடி கதவு பொருத்தப்பட்டு Divisional Accountant என்று எழுதப்பட்டிருந்த அறையின் உள்ளே சென்று அங்கு அமர்ந்திருந்த கோட்டக் கணக்கர் திரு.M.பெரியசாமி என்பவரிடம் நான் என்னையும் காவல் துணைக்கண்காணிப்பாளர் மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அறிமுகம் செய்து கொண்டு அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்வதற்காக வந்த

விபரம் அவரிடம் தெரிவிக்கப்பட்டது. அலுவலகத்தில் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் ஆஜரில் இருந்த பணியாளர்கள் அனைவரையும் சோதனை செய்யப்பட்டது. அலுவலகத்தில் பணியில் இருந்த 1). கோட்ட கணக்கர் திரு.M.பெரியசாமி என்பவரை சோதனை செய்ததில் ரூ.450/- இருந்தது. 2). கண்காணிப்பாளர் திரு.M.மருதநாயகம் என்பவரை சோதனை செய்ததில் ரூ.210/- இருந்தது. 3). உதவியாளர் திருமதி.ப.நாகலெட்சுமி என்பவரின் கைப்பையை சோதனை செய்ததில் ரூ.930/- இருந்தது. 4). உதவியாளர் திரு.P.மாரியப்பன் என்பவரை சோதனை செய்ததில் ரூ.37/- இருந்தது. 5) இளநிலை உதவியாளர் திருமதி.அமுதா என்பவரின் கைப்பையை சோதனை செய்ததில் ரூ.700/- இருந்தது. 6) இளநிலை உதவியாளர் திருமதி.சுதா என்பவரின் கைப்பையை சோதனை செய்ததில் பணம் ஏதும் இல்லை. 7) தட்டச்சர் திரு.க.தனபால் என்பவரை சோதனை செய்ததில் ரூ.3,550/- இருந்தது. 8) பதிவுறு எழுத்தர் திரு.A.தண்டபாணி என்பவரை சோதனை செய்ததில் ரூ.90/- இருந்தது. 9) அலுவலக உதவியாளர் திரு.A.ஜான்பாஸ்கர் என்பவரை சோதனை செய்ததில் ரூ.3775/- இருந்தது. 10) கொடைக்கானல் கோட்டப்பொறியாளர் அலுவலகத்தில் இருந்து திண்டுக்கல் கோட்டப்பொறியாளர் அலுவலகத்தில் அயல்பணியாக பணிபுரியும் உதவியாளர் திருமதி. நிலவர்பானு என்பவரின் கைப்பையை சோதனை செய்ததில் ரூ.1320/- இருந்தது. 11) தற்காலிகமாக தட்டச்சராக பணிபுரியும் திருமதி.அனுசுயாதேவி என்பவரின் கைப்பையை சோதனை செய்ததில் ரூ.100/- இருந்தது. 12) தற்காலிகமாக பணியாளர் திரு.காமராஜ் என்பரை சோதனை செய்ததில் ரூ.320/- இருந்தது. 13) அலுவலக உதவியாளர் திரு.மதுரைவீரன் என்பவரை சோதனை செய்ததில் ரூ.530/- இருந்தது. 14) முதுநிலை வரைதொழில் அலுவலர் திரு.M.G.கணேசன் என்பவரை சோதனை செய்ததில் ரூ.510/- இருந்தது. 15) இளநிலை வரைதொழில் அலுவலர் திரு.செ.காமராஜ் என்பவரை சோதனை செய்ததில் ரூ.250/- இருந்தது. 16) இளநிலை வரைதொழில் அலுவலர் திரு.சசிக்குமார் என்பவரை சோதனை செய்ததில் ரூ.174/- இருந்தது. 17) டிராயிங் பிரிவு, தற்காலிக கம்யூட்டர் ஆப்பரேட்டர், திரு.T.கார்த்திகேயன் என்பவரை சோதனை செய்ததில் ரூ.460/- இருந்தது. மேற்படி பணியாளர்களிடம் இருந்த பணம் சம்மந்தமாக விசாரிக்க அவர்களது சொந்தபணம் என்று கூறியதின்பேரில் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இது சம்மந்தமாக அனைவரிடமும் என்னால் வாக்குமூலம்

பதிவுசெய்யப்பட்டது. அலுவலகத்தின் தரைத்தளம் மற்றும் முதல்தளத்தில் இருந்த அறைகளை சோதனை செய்ததில் தரைத்தளத்தில் இருந்த கண்காணிப்பாளர் திரு.மருதநாயகம் என்பவரின் அறையில் அவருடைய இருக்கைக்கு இடதுபுறம் இருந்த D.E(H) DGL 12/12 என்று எழுதப்பட்டிருந்த சுமார் நான்கு அடி உயர பச்சை நிற இரும்பு பீரோவை சோதனை செய்வதற்காக கண்காணிப்பாளரிடம் இருந்து பீரோ சாவி பெறப்பட்டு காவல் துணைக்கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் கோட்ட கணக்கர் முன்னிலையில் நான் பீரோவை திறந்து சோதனை செய்தபோது முதல் அடுக்கில் பிளாஸ்டிக் டப்பா இருந்தது. அதில் சாவிகள் இருந்தது. இரண்டாவது மற்றும் மூன்றாவது அடுக்குகளில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. நான்காவது அடுக்கில் ஆவணங்களும் அவற்றிற்கு இடையே வெளிர்நிற காக்கி கவரில் Stapler Pin போடப்பட்டு கத்தையாக இருந்தது. அந்த கவரை காவல் துணைக்கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் கோட்ட கணக்கர் முன்னிலையில் நான் பிரித்து பார்த்தபோது அதில் ஐந்நூறு ரூபாய் நோட்டு கட்டுகள் மூன்று தனித்தனியாக ரப்பர் பேண்டு போடப்பட்டு இருந்தன. அதில் ஒவ்வொரு கட்டிலும் நூறு நோட்டுகள் வீதம் (500x100) ரூ.50,000/- இருந்தது. ஆக மொத்தம் மூன்று கட்டுகளில் முன்னூறு ஐநூறு ரூபாய் நோட்டுகள் ரூ.1,50,000/- இருந்தது. அது பற்றி நான் கண்காணிப்பாளர் திரு.மருதநாயம் அவர்களிடம் விளக்கம் கேட்க அதற்கு அவர் இந்த பணம் தன்னுடையது இல்லை என்றும் அவரது அறையில் உள்ள பீரோவிற்குள் எப்படி வந்தது என்று தனக்கு தெரியாது என்று கூறினார். பின்னர் அவரிடம் காவல் துணைக்காணிப்பாளர் அவர்கள் நிலுவையில் உள்ள EMD பத்திரங்கள் தொடர்பான பதிவேடுகளை ஆஜர் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அதன்பேரில் கண்காணிப்பாளர் திரு.மருதநாயகம் அவர்கள் அவரது இருக்கையின் மேல் வைக்கப்பட்டிருந்த கீழ்கண்ட பதிவேடுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதன் விபரம் பின்வருமாறு:-

| வ.எண் | ஆவண விபரம் |
|---|---|
| 1 | Deposit Register (EMD/FSD) Divisional Engineer (H), Construction and Maintenance, Dindigul 2018-2019, 2019-2020, 2020-2021, 2022-2023 |
| 2 | Deposit Register (EMD/FSD) Divisional Engineer (H), Construction and Maintenance, Dindigul 2023-2024 |

மேற்கண்ட பதிவேடுகளை நான் மற்றும் கண்காணிப்பாளர் திரு.மருதநாயகம் ஆகியோர் முன்னிலையில் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் ஆய்வு செய்தார். அதில் மேலே கண்ட வரிசை எண் 1ல் குறிப்பிடப்பட்டுள்ள பதிவேட்டில் கீழ்கண்ட பக்கங்களில் குறிப்பிடப்பட்டிருந்த வரிசை எண்களில் சொல்லப்பட்ட EMD Bond தொடர்பான விபரங்கள் ஆய்வு செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:-

**<u>Deposit Registerr (EMD/FSD) Divisional Engineer (H), Construction and Maintenance, Dindigul 2018-2019, 2019-2020, 2020-2021, 2022-2023:-</u>**

| பதிவேட்டில் உள்ள வ.எண் | பக்கம் எண் |
|---|---|
| 1590 | 191 |
| 1592 | 191 |
| 1579 | 189 |
| 1581 | 190 |
| 1559 &1560 | 186 |
| 1163, 1164, 1165, 1167, 1169, 1171, 1173, 1175 to 1179 | 123 to 125 |
| 1403 | 162 |
| 1031 | 103 |
| 1336 | 152 |

மேற்கண்டவாறு பதிவேடுகளில் காணப்பட்ட வரிசை எண்களுக்கு உரிய EMD Bondகளை எடுத்து ஆஜர் செய்யுமாறு கண்காணிப்பாளர் திரு.மருதநாயகம் அவர்களை துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டார். அதன் பேரில் கண்காணிப்பாளர் மருதநாயகம் அவர்களும் அவரது இருக்கைக்கு எதிரே கிழக்கு முகம் பார்த்தவாறு இருந்த பணப்பெட்டகத்தை திறந்து மேற்கண்ட வரிசை எண்களுக்கு உரிய EMD Bondகளை ஆஜர் செய்தார். அவற்றை மேற்படி பதிவேடுகளுடன் ஒப்பிட்டபோது மேற்கண்ட EMD Bondகள் அனைத்தும் தொடர்புடைய ஒப்பந்ததாரர்களிடம் ஒப்படைக்க வேண்டி கோட்ட பொறியாளரால் கையொபப்பம் இடப்பட்டிருந்தது. காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் அங்கிருந்த கண்காணிப்பாளர் திரு.மருதநாயகம் அவர்களிடம் EMD Bond கள் ஏன் தொடர்புடையவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என கேள்வி எழுப்பினார். அதற்கு கண்காணிப்பாளர் திரு.மருதநாயம் அவர்கள் மேற்படி Bondகளை ஒப்பந்ததாரர்கள் வந்து கேட்டால் மட்டும் கொடுப்பேன் என்று தெரிவித்தார். அவரது விளக்கம்

ஏற்றுக்கொள்ளதக்க வகையில் இல்லாமலும் மேற்படி Bondகளை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் ஒப்படைக்காமல் வேண்டுமென்றே லஞ்சமாக பணத்தை பெற்றுக்கொண்டு ஒப்படைத்து வருகிறார் என்று நம்புவதற்கு முகாந்திரம் இருப்பதாலும் தற்போது அவரது அறையில் கண்டறியப்பட்ட பணம் ரூ.1,50,000/- அவ்வாறே EMD Bondகளை திரும்ப தருவதற்காக ஒப்பந்ததாரர்களிடம் லஞ்சமாக கேட்டு பெற்றிருக்கலாம் என்று நம்புவதற்கு முகாந்திரம் இருந்ததாலும் பணம் ரூ.1,50,000/- ஆனது ஆய்வுக்குழு ஆய்வாளர் முன்பாக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் மேலே கண்ட பதிவேடுகளின் தொடர்புடைய பக்கங்கள் மற்றும் மேற்கண்ட வரிசை எண்களில் இணைக்கப்பட்டிருந்த EMD Bond களும் ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு தகவலின் பேரில் அலுவலகத்திற்கு வருகை தந்த கோட்டப்பொறியாளர் திரு.கே.பி.சங்கர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் கண்காணிப்பாளர் திரு.மருதநாயகம் அவர்கள் ஆஜர் செய்த EMD Bondகளை ஆய்வு செய்தபோது கீழ்கண்ட வரிசை எண்களுக்குரிய Bondகள் கோட்டப்பொறியாளரின் உத்தரவின்றியே சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம்:-

| வ.எண் | Bond Slip வரிசை எண் | EMD Amount Rs |
|---|---|---|
| 1 | 1608 | 10,000 |
| 2 | 1610 | 10,000 |
| 3 | 1670 | 20,000 |
| 4 | 1679 | 20,000 |
| 5 | 1599 | 10,000 |
| 6 | 1617 | 20,000 |
| 7 | 1616 | 20,000 |
| 8 | 1607 | 20,000 |

மேற்கண்ட EMD Bondகள் எவ்வித உத்தரவும் இன்றி ஒப்பந்ததாரர்களுக்கு ஏன் வழங்கப்பட்டது என்று காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் கண்காணிப்பாளர் திரு.மருதநாயகம் அவர்களிடம் விளக்கம் கேட்டார். அதற்கு அவர் மேற்கண்ட Bondகள் கோட்ட கணக்கர் திரு.பெரியசாமி அவர்கள் அறிவுறுத்தியதின் பேரிலே சம்மந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டதாக தெரிவித்தார். மேற்கண்ட Bond Slipகள் ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு கோட்டப்பொறியாளர் திரு.கே.பி.சங்கர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மற்ற அறைகளை சோதனை செய்ததில் சந்தேகத்திற்குரிய வகையில் பணம் ஏதும் இல்லை.

மேலும் இந்த அலுவலகத்தில் இருந்த ஆவணங்களான வருகைப்பதிவேட்டை பார்வையிட்டதில் இன்று பணிக்கு வந்த அனைவரும் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தனர். உதவியாளர் திரு.ராஜகோபால் என்பவர் மட்டும் இன்று காலை வருகைபதிவேட்டில் கையொப்பம் செய்து விட்டு வெளி அலுவலக சென்றதாக கோட்ட கணக்கர் தெரிவித்தார். மேலும் இந்த அலுவலகத்தில் பணப்பதிவேடு, இயக்கப்பதிவேடு மற்றும் தனிநபர் கையிருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்றும், இந்த அலுவலகத்தில் நேரடியாக பணபரிவர்த்தனை எதுவும் நடைபெறுவதில்லை என்றும், பணபரிவர்த்தனை அனைத்தும் வங்கி மூலமாகவே கையாளப்படுகிறது என்றும் தெரிவித்தார். மேலும் இந்த அலுவலகத்தில் வேறு பொது மக்கள் யாரும் சோதனையின் போது இல்லை. மேலும் இத்திடீர் தணிக்கையின் போது அலுவலகத்திலிருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் சோதனையின் போதிருந்த அலுவலர்களுக்கோ, மற்றவர்களுக்கோ உடல் ரீதியாகவோ மற்றும் மன ரீதியாகவோ எவ்வித துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. இந்த திடீர் இணை ஆய்வு தொடர்பாக செயல்முறை குறிப்புகள் 10.10.2023ம் தேதி காலை சுமார் 10.45 மணிமுதல் மாலை 17.45 மணிவரை தயார் செய்யப்பட்டது. எனவே கண்காணிப்பாளர் திரு.மருதநாயகம் என்பவரின் அறையில் அவருடைய இருக்கைக்கு இடதுபுறம் இருந்த D.E(H) DGL 12/12 என்று எழுதப்பட்டிருந்த சுமார் நான்கு அடி உயர பச்சை நிற இரும்பு பீரோவில் இருந்த ரூ.1,50,000/-க்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் திண்டுக்கல் நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் அலுலக கண்காணிப்பாளர் திரு.மருதநாயகம் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/- xxxxx (M.Singaravelan, 10/10/2023)

Sir, Received the complaint on 10.10.2022 at 19.00 Hrs. and registered a case in Dindigul Vigilance and Anti-Corruption Cr.No.05/2023 u/s 7(a)of of P.C Act 1988, as amended by the PC (amendment) Act 2018, on 10.10.2023 at 19.00 hrs. Sd/-xxxxx (J.Nagarajan, Deputy Superintendent of Police, V&AC, Dindigul 10.10.2023)

Original FIR along with the complaint of M.Singaravelan, the Inspection Cell Inspector, O/o. the Inspection Cell Officer, Madurai and the Joint Surprise check proceedings are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

10/x/23

(J.Nagarajan)
Dy.Supdt. of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.